மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற 2020 ஆம் ஆண்டுக்குள் போக்குவரத்துத் துறையில் விபத்துகளையும் உயிரிழப்புகளையும் பாதியாகக் குறைக்க வேண்டுமென்ற இலக்கினை அடைவதற்காக விபத்துகள் அதிகமாக நடைபெறக்கூடிய இடங்களைக் கண்டறிந்து, அங்கு கேமராக்களைப் பொருத்தி, கட்டுப்பாட்டு அறைகளை உருவாக்க 25 கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு போக்குவரத்துத் துறையின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

5. தகவல் கோரல்

(அ) சேலம், பசுமை வழிச் சாலைத் திட்டம் தொடர்பான போராட்டம் மற்றும் மாற்றுப் பாதையில் நிறைவேற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

முற்பகல் 11—10

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய அரசினுடைய திட்டங்கள் எதுவாக இருந்தாலும், மக்களினுடைய நலனை மையமாக வைத்துத்தான் அந்தத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. அந்த வகையில் மக்களும் சுதந்திரமாகத் தங்களுடைய கருத்துகளைத் தெரிவிப்பதற்கு, அவர்களுக்குரிய வாய்ப்பை வழங்கிட வேண்டும். அதேபோல, மக்கள் மட்டுமல்ல, மக்களுக்கு பணியாற்றக்கூடிய அரசியல் கட்சிகளும் அதுகுறித்து கருத்துகளை எடுத்துச்சொல்ல, ஆய்வு நடத்த எல்லாவித உரிமைகளையும் படைத்ததாக இருக்கிறது. குறிப்பாக, சாலைத் திட்டத்தைப் பற்றி மக்களும், அரசியல் கட்சிகளும் கருத்துகளே சொல்லக் கூடாது என்று வாய்ப்பூட்டு பூட்டக்கூடிய வகையிலே, இன்றைக்கு இருக்கக்கூடிய காவல் துறை தொடர்ந்து பணிகளைச் செய்து வந்து கொண்டிருக்கிறது. அதுபற்றி விளக்கிட வேண்டுமென்ற அடிப்படையிலே, ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதற்கு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.*

2018 ஜூலை 9] [திரு. மு.க. ஸ்டாலின்]

அதேபோல், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அவர்கள், அவருடைய நாடாளுமன்றத் தொகுதிக்குச் சென்று, மக்களைச் சந்தித்து, குறைகளைக் கேட்க முடியாத ஒரு சூழ்நிலையிலே அவர் தடுக்கப்பட்டிருக்கிறார். அதேபோல, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள், அங்கே இருக்கக்கூடிய மக்களைச் சந்திக்கச் சென்ற நேரத்தில், அவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஆம் ஆத்மி கட்சியினுடைய மாநில ஒருங்கிணைப்பாளர் திரு. வசீகரன் அவர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். அதேபோல, செய்தி சேகரிக்கச் சென்ற 'தீக்கதிர்' ஏட்டினுடைய நிருபர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அதையெல்லாம் தாண்டி நள்ளிரவிலே வீடு புகுந்து விவசாயிகளைக் கைது செய்யக்கூடிய நிலையும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஜனநாயக முறையிலே போராடினால், இந்த அரசுக்கு என்ன தயக்கம் என்பதுதான் என்னுடைய கேள்வியாக இருக்கிறது.

மக்களுடைய விருப்பத்திற்கு மாறாக ஒரு திட்டம் வருகிறது என்று சொன்னால், அந்தத் திட்டத்தைப் பற்றி மக்கள் அறிந்துகொள்ள, புரிந்துகொள்ள வாய்ப்பினை வழங்கிட வேண்டும். எனவே, அதைத் தடுப்பதற்கு அரசுக்கு என்ன நிர்ப்பந்தம் என்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. ஆகவே, ஒரு நிபுணர் குழுவைக்கூட அமைத்து, சேலம் பசுமை வழிச் சாலைத் திட்டத்தை மாற்றுப் பாதையிலே நிறைவேற்ற இந்த அரசு முன்வர வேண்டுமென்று நான் ஏற்கெனவே பத்திரிகையாளர்களுக்கு என்னுடைய செய்தியாக வெளியிட்டிருக்கிறேன். இன்னும்கூட சொல்ல வேண்டுமென்று சொன்னால், சர்வாதிகாரத்தால் எல்லாவற்றையும் சாதித்துவிட முடியும் என்று மனப்பால் குடித்த அரசுகள், மண்ணில் புதைந்ததுதான் வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய ஜனநாயகத்தினுடைய தனிச் சிறப்பே சுதந்திரமான பேச்சுரிமையும், எழுத்துரிமையும்தான் என்பதை இந்த அரசு உணர வேண்டும். கைது செய்வதாலும், அடக்குமுறையாலும் எதையும் சாதித்துவிட முடியாது. எனவே, இந்தப் போக்கை அரசு உடனடியாகக் கைவிட வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 7–7–2018 அன்று பிற்பகல் தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டியில், சாமியாபுரம் சாலை சந்திப்பு அருகில், சேலம்–சென்னை பசுமை வழிச் சாலைத் திட்டம் தொடர்பாக பொதுமக்களைச் சந்திப்பதற்காக திண்டுக்கல் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்,* CPI (M) *கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் தனது கட்சியினருடன் சென்றுள்ளார். அப்போது பாதுகாப்புப் பணியில் இருந்த காவல் துறை ஆய்வாளரிடம் மாண்புமிகு முன்னாள் உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள், தான் விவசாயிகளையும், பொதுமக்களையும் சந்திக்கப் போவதில்லை என்றும், பசுமை வழிச் சாலை அமையவுள்ள இடத்தைப் பார்வையிட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். பின்னர், அவ்விடத்திலிருந்து சென்ற செல்வி பாலபாரதி அவர்கள், கோட்டைமேடு என்ற இடத்தில் நிலங்களைப் பார்வையிட்டு, அங்கிருந்த விவசாயிகளையும், பொதுமக்களையும் அழைத்து, சந்தித்து, சில கருத்துகளைத் தெரிவித்துள்ளார். அந்தச் சமயம், காவல் துறையினர், செல்வி பாலபாரதி உள்ளிட்ட 14 பேரை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் கைது செய்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக ஏ. பள்ளிப்பட்டி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அன்று மாலையே அனைவரும் விடுவிக்கப்பட்டனர் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரைக்கும் இன்றைக்கு முழு சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.* (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–15

ஏற்கெனவே நான் சொன்னதைப்போல, அதிக போராட்டங்கள் நடைபெற்று வரும் மாநிலம் தமிழ்நாடுதான். யார் போராட்டத்தை நடத்தினாலும், அவர்கள் கேட்கின்ற பாதுகாப்பு உட்பட அனைத்து வசதிகளையும் கொடுக்கின்ற அரசு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) *யாரையும் தடை செய்வதில்லை. ஆகவே, சில பேர் வேண்டுமென்றே இந்தத் திட்டத்தை முடக்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் செயல்படுகின்ற காரணத்தினால்தான் இப்படிப்பட்ட*

2018 ஜூலை 9] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

பிரச்சினைகள் உருவாகின்றன. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், வாய்ப்பூட்டு என்று சொன்னார்கள். உண்மையிலேயே பல்வேறு மாநிலங்களில் எத்தனையோ அரசுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில்தான் இவ்வளவு சுதந்திரமாக பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களெல்லாம் அரசைப்பற்றி விமர்சனம் செய்கின்றார்கள். அதையெல்லாம் இந்த அரசு பொறுத்துக் கொண்டுதான் இருக்கிறது. கடந்த காலத்திலே நீங்கள் எத்தனை வழக்குகள் போட்டீர்கள் என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால், சுதந்திரமாக கருத்துகளைச் சொல்லக்கூடிய அளவுக்கு அனுமதிக்கக்கூடிய ஒரே அரசு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) *நீங்கள் பேச்சுக்கு வேண்டுமென்றால் வாய்ப்பூட்டு என்று சொல்லலாமேயொழிய, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் கருத்து சுதந்திரம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர், மரியாதைக்குரிய டாக்டர் அன்புமணி ராமதாஸ் அவர்கள் அவருடைய நாடாளுமன்றத் தொகுதிக்குக்கூட செல்ல முடியவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அது தவறான கருத்து. அவர் பல இடங்களுக்குச் சென்று விவசாயிகளையும், பொதுமக்களையும் சந்தித்து கருத்துகளைக் கேட்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். அந்தக் கோரிக்கையின் அடிப்படையில், சேலம் மாவட்டத்திற்குச் சென்று பொதுமக்களிடம் கருத்துகளைக் கேட்டிருக்கிறார். அதேபோல், பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்றும் கருத்துகளைக் கேட்டிருக்கிறார். மேலும், நீங்கள் தருமபுரியில் ஒரே இடத்தில் இருந்து, எந்தெந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றார்களோ, அவர்களெல்லாம் உங்களிடத்திலே வந்து கருத்துகளைச் சொன்னார்கள் என்றால், நீங்கள் கேட்கலாம் என்று சொன்னோம். தருமபுரி அவருடைய தலைமையிடம். பல்வேறு ஊர்களுக்குச் செல்கின்றபோது, அங்கு சட்டம்—ஒழுங்குப் பிரச்சினை ஏற்படுகிறது.

அங்கு ஏதாவது ஒரு பிரச்சினை ஏற்பட்டுவிட்டால், அது அரசினுடைய பொறுப்புக்கு வந்துவிடுகின்றது. அதற்காகத்தான் நீங்கள் ஒரே இடத்தில் இருந்துகொண்டே மக்களின் கருத்துகளைக் கேட்கலாம் என்று அவரிடத்திலே தெரிவித்தோமேயொழிய அவரை எந்தவிதத்திலும் தடுக்கவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வாசன் அவர்களுக்கும் அதேபோலத்தான். அந்தப் பகுதியில் சட்டம்—ஒழுங்குப் பிரச்சினை ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் காவல் துறை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவரிடத்திலே எடுத்துக் கூறினார்கள். இருந்தாலும், அவர் அந்தக் கூட்டத்தை உள் அரங்கிலே ஏற்பாடு செய்து நடத்தியிருக்கிறார் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சில பேர் இந்தத் திட்டத்தை தமிழகத்திற்கு கொண்டுவரக் கூடாது என்று முழு மூச்சுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஏற்கெனவே பலமுறை தெரிவித்திருக்கிறேன். இது ஒரு மிகப் பெரிய, சிறந்த திட்டம். உங்களுடைய ஆட்சியில்கூட பல்வேறு நிலங்களை எடுத்திருக்கின்றீர்கள். கிட்டத்தட்ட 3,023 கிலோ மீட்டர் என்று நான் கருதுகிறேன். அவ்வளவு நிலங்களை நீங்கள் கையகப்படுத்தி சாலையை அமைத்திருக்கிறீர்கள். 17 சாலைகளை அமைப்பதற்குத் தேவையான நிலங்களை கையகப்படுத்தி நீங்கள் சாலைகளை அமைத்திருக்கிறீர்கள். ஆகவே, சாலை அமைப்பது என்பது மிக, மிக முக்கியமான ஒன்றாகும். இது தொழில்நுட்பத்துடன்கூடிய ஒரு பசுமைவழிச் சாலையாகும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, இந்தச் சாலை ஏதோ சேலத்திற்காகத்தான் அமைக்கப்படுகின்றது என்ற ஒரு தவறான தகவலை பரப்பிக்கொண்டு வருகின்றீர்கள். அது முற்றிலும் தவறு. மேற்கு மாவட்டம், அதாவது, சேலத்திற்கு பிறகு, நாமக்கல், கரூர், திண்டுக்கல் மற்றும் மதுரை போன்ற மாவட்டங்களும் இருக்கின்றன. அதேபோல, இந்தப் பக்கம் பார்த்தீர்கள் என்றால், ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், கேரளா வரை அந்த வழியாகச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. மேற்கு மாவட்டம் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து வந்து செல்கின்ற கனரக வாகனங்களெல்லாம் அந்த வழியாகத்தான் செல்கின்றன. அவற்றின் பாதுகாப்பு கருதிதான் இந்தத் திட்டம் கொண்டுவரப்படுகின்றது. இதுவொரு சிறந்த திட்டம். இத்திட்டத்தினால் சுமார் 60 கிலோ மீட்டர் பயண தூரம் குறைகிறது. வாகனங்களிலிருந்து வெளியே வருகின்ற புகையைத்

தடுக்கின்ற விதத்திலே, அதாவது, சுற்றுச்சூழலை பாதுகாக்கக்கூடிய அளவிலே இந்தத் திட்டம் உருவாக்கப்படுகின்றது. நவீன முறையில் இந்தச் சாலை அமைக்கப்படுகின்றது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தேன். உங்களுடைய ஆட்சிக் காலத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, அதாவது, 2009–2010-ல் உளுந்தூர்பேட்டை சாலை மற்றும் கிருஷ்ணகிரி சாலை அமைக்கப்பட்டது. அப்போது, தமிழ்நாட்டில் இருந்த வாகனங்களின் எண்ணிக்கை 1 கோடியே 7 இலட்சம்தான். இப்போது, தமிழ்நாட்டில் 1 கோடியே 57 இலட்சம் வாகனங்கள் இருக்கின்றன. இந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு கிட்டத்தட்ட 5 ஆண்டுகள் ஆகும். ஆண்டொன்றிற்கு 14 இலட்சம் வாகனங்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. அடுத்த 5 ஆண்டுகளில் வாகனங்களின் எண்ணிக்கை 70 இலட்சம் அதிகரிக்கக்கூடும். 5 வருடங்களில் வாகனங்களின் எண்ணிக்கை 2 கோடியே 27 இலட்சமாக உயரும். 70 இலட்சம் வாகனங்கள் கூடுகின்றபோது வாகனங்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட, 2 கோடியே 27 இலட்சமாக தமிழ்நாட்டிலே அதிகரிக்கும். ஆக, இந்த வாகனங்களெல்லாம் செல்வதற்குத் தகுந்த தொழில்நுட்பத்துடன்கூடிய சாலை வசதி தேவை. அதற்காகத்தான் இந்தச் சாலைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு, மத்திய அரசாங்கம் நிதியுதவி செய்கிறது. அதனடிப்படையிலே நாம் சாலை அமைக்கின்றோம். சாலை அமைக்கும் திட்டத்திற்காக நிலம் கொடுக்கின்றவர்களுக்குப் போதிய அளவிற்கு, தேவையான அளவிற்கு நில இழப்பீட்டுத் தொகை பெற்றுத் தருவதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்பதை இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–20

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, 31–3–2008 அன்றுள்ளவாறு இரு சக்கர வாகனங்களின் எண்ணிக்கை 82,60,000. கனரக மற்றும் இலகு ரக வாகனங்களின் எண்ணிக்கை 18,08,991 ஆக இருந்தது. அடுத்தபடியாக, 31–3–2018 அன்றைய நிலவரப்படி, இரு சக்கர வாகனங்களினுடைய எண்ணிக்கை 2,15,86,210. நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்களின் எண்ணிக்கை 41,92,286. ஆகமொத்தம், 2,57,78,496 ஆகும். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, 31–3–2008–ல் கனரக மற்றும் இலகுரக வாகனங்களினுடைய எண்ணிக்கை 18,08,991.

இன்றைக்கு வாகனங்களினுடைய எண்ணிக்கை அதிகரிக்கின்ற காரணத்தினாலே, அதற்குத் தேவையான சாலை வசதியை அரசு அமைத்துக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் விபத்தைத் தடுக்க முடியும். ஆகவே, இந்தத் திட்டம், ஒரு சிறந்த திட்டம். இந்தத் திட்டத்தை வேண்டுமென்றே சிலர் எதிர்க்கின்றார்கள். இது தவறு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இந்தச் சாலை அமைப்பதற்குண்டான பணியை செய்வதற்கு அரசுக்கு அனைவரும் தங்களுடைய ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்று இத்தருணத்திலே கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த matter–ஆ அல்லது வேறு சப்ஜெக்ட் குறித்துப் பேசப் போகிறீர்களா? (குறுக்கீடு) விவாதமாகப் போய்விடுமே. சரி, கேளுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு விளக்கம் தந்திருக்கிறார்கள். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இருந்த போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை பற்றியெல்லாம் விவரமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் மறுக்கவில்லை. இந்தத் திட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம் என்று நான் இங்கே சொல்லவில்லை. அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது சாலைகள் எல்லாம் போடப்பட்டன. அப்போது நிலங்களெல்லாம் கையகப்படுத்தப்பட்டு அந்த முறையிலேதான் சாலைகள் போடப்பட்டன. அதை நான் மறுக்கவில்லை. ஆனால், அப்பொழுது மக்களிடத்திலே இந்த எதிர்ப்பு கிடையாது. ஆனால், இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் திட்டத்திற்கு மக்கள் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அதற்கேற்ற வகையிலே ஒரு நிபுணர் குழுவை அமைத்து, மக்களுடைய கருத்துகளைக் கேட்டு, மாற்றுப் பாதையைக் கண்டுபிடித்து, அதனடிப்படையிலே சாலையை அமைக்க வேண்டுமென்றுதான் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளுக்கு முன்பு இப்படிப்பட்ட ஊடகங்களும், பத்திரிகைகளும் அதிகம்

இல்லை. ஆனால், இன்றைக்கு ஒரு செய்தி என்றால் அது அடுத்த நிமிடமே பரவிவிடுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் காலகட்டத்தில் நீங்கள் சாலையை அமைத்துவிட்டீர்கள். இந்தக் காலகட்டமாக இருந்தால், நீங்களும் இப்படித்தான் அனுபவிப்பீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இது தனியொரு நபருக்காகப் போடப்படுகின்ற சாலை அல்ல. இன்னும் சில பேர், அங்கே மலையில் இருக்கிற இயற்கை வளங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள் என்ற ஒரு தவறான கருத்தைச் சொல்லி வருகிறார்கள். நீங்களும் சாலை அமைத்தீர்கள். இயற்கை வளங்களை எடுத்துக்கொண்டா போய்விட்டீர்கள்? கிடையாது. வேண்டுமென்றே, திட்டமிட்டு ஒரு தவறான செய்தியை பரப்பிக்கொண்டு வருகிறார்கள். இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. ஏனென்று சொன்னால், நாளுக்குநாள் சாலைகளினுடைய தரம் உயர்ந்துகொண்டே வருகின்றது. அன்றையதினம் நீங்கள் சாலைகளை அமைத்தீர்கள். நிறைய இடத்திலே junction *இருந்தது. அப்போது குறைவான வாகனப் போக்குவரத்து இருந்த காரணத்தினால், விபத்துகள் குறைவாக ஏற்பட்டன. இப்போது அந்த இடங்களையெல்லாம் பார்க்கும்போது, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களே சாலை சந்திப்புகளில் உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். அன்றைய காலகட்டத்தில் வாகனங்களினுடைய எண்ணிக்கை குறைவாக இருந்த காரணத்தினால் விபத்துகள் அதிகமாக நடக்கவில்லை. இன்றைக்கு வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்த காரணத்தினாலே, சாலை சந்திப்புகளில் எல்லாம் விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்தச் சாலை சந்திப்புகளில் எல்லாம் உயர்மட்டப் பாலம் நவீன முறையிலே, விபத்து ஏற்படாத முறையிலே, தொழில்நுட்பத்துடன் சாலைகள் அமைக்கக்கூடிய வகையில்தான் பசுமை வழிச் சாலைத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.*

அதுமட்டுமல்ல, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, ஒவ்வொரு நாளும் எரிபொருளின் விலை ஏறிக் கொண்டே போகிறது. ஆகவே, 60 கிலோ மீட்டர் பயண தூரம் குறைகின்ற காரணத்தினாலே எரிபொருள் மிச்சமாகிறது. உதாரணத்திற்கு லாரியை எடுத்துக்கொண்டால், கணக்கெடுப்பின்படி, கிட்டத்தட்ட 60,000 முதல் 70,000 கனரக வாகனங்கள் செல்லக்கூடிய சூழ்நிலையிருக்கிறது. ஒரு லாரி, ஒரு லிட்டருக்கு 4 கிலோ மீட்டர் தூரம் போவதாகச் சொல்கிறார்கள். அப்படியென்றால், நமக்கு 15 லிட்டர் எரிபொருள் மிச்சமாகிறது.

இன்றைய சூழ்நிலையிலே 15 லிட்டர் என்றால், ஒரு லாரிக்கு ரூ.1,050/– மிச்சமாகிறது. அப்படியென்றால், எவ்வளவு எரிபொருள் சிக்கனம் ஏற்படும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, இவற்றையெல்லாம் கணக்கிலே கொண்டு அடுத்த 5 ஆண்டுகளில் பார்த்தால், வாகனங்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரித்துவிடும். அப்போது உடனடியாக நாம் சாலை அமைக்க முடியாது. தற்போதுள்ள வாகனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு, சாலைகளினுடைய தரத்தை உயர்த்தி, தொழில்நுட்பத்துடன் சாலை அமைக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, மத்திய அரசு கொண்டு வந்த திட்டமாக இருந்தாலும், மாநில அரசின் சார்பில் தமிழகத்திலே சாலை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம். அந்தக் கோரிக்கையை ஏற்று, பசுமை வழிச் சாலைத் திட்டத்தை அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி தந்து, அந்த சாலைப் பணிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

முற்பகல் 11–25

பெரும்பாலான இடங்களில், கிட்டத்தட்ட நூற்றுக்கு 90 சதவிகிதம் நில உரிமையாளர்கள் நிலத்தை விட்டுக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு சிலர், சில கட்சிகளைச் சேர்ந்தவர்கள், போராட்டத்தைச் செய்துகொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே இந்தச் சாலை வர வேண்டும் என்று பல பேர் என்னிடத்தில் சொல்லியிருக்கின்றார்கள். பல பேர் மனமுவந்து நிலத்தையும் கொடுத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அதிக இழப்பீடும் கொடுக்கப்பட்டு வருகிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொடுக்கப்பட்ட இழப்பீட்டைவிட அதிகமான இழப்பீடு கொடுக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, நிலத்தினுடைய மதிப்பீடு உயர்ந்த காரணத்தினால், guideline value இன்றைக்கு உயர்ந்திருக்கின்றது. இப்படி உயர்ந்து இருக்கின்ற காரணத்தினால், நிலம் கொடுக்கின்ற அந்த நில உரிமையாளர்களுக்குத் தேவையான இழப்பீட்டுத் தொகையை தமிழக அரசானது மத்திய அரசிடமிருந்து பெற்றுத் தருவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, அரை ஏக்கர், முக்கால் ஏக்கர் நிலம் இருந்து, அவை முழுவதும் சாலை அமைப்பதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டால் அவர்களுக்கு பசுமை வீடுகள் கட்டப்பட இருக்கின்றன. அவர்களுக்குத் தேவையான வசதிகளையும், இழப்பீட்டுத் தொகைகளையும் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜூலை 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இது விவாதமாகப் போகக் கூடாது.* (குறுக்கீடு) *இல்லை, இன்றைக்கு எனக்கு நேரம் இல்லை. இன்றைக்கு 2–00 மணிக்கு* guillotine *செய்தாக வேண்டும். நீங்கள் கொஞ்சம் ஒத்துழையுங்கள். அவருக்கு மைக் கொடுங்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Guideline value *உயர்ந்துபோய்விட்டது என்று சொன்னீர்கள். அது இருந்தாலும் பரவாயில்லை, 33 சதவிகிதம் குறைத்துவிட்டீர்கள். ஆனால்,* registration charges *44 சதவிகிதம் உயர்த்திவிட்டீர்கள். அதனால் தற்போது* registration *செய்வது 30 சதவிகிதம் குறைந்துவிட்டது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள்தான் குறைக்கச் சொன்னீர்கள். நிலத்தினுடைய வழிகாட்டி மதிப்பு அதிகமாக இருக்கின்றது, சில இடங்களில் மார்க்கெட் மதிப்பைவிட கூடுதலாக இருக்கின்றது என்று நீங்கள்தான் கருத்தைத் தெரிவித்தீர்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் பல்வேறு கூட்டங்களைக் கூட்டி,* (மேசையைத் தட்டும் ஒலி) *ஆய்வு நடத்தி, அந்த ஆய்வு அறிக்கையின்படி எவ்வளவு குறைக்கலாம் என்று கருதி அது குறைக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

6. தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், பிரிவு 4(A)–ஐ நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக மாண்புமிகு வனத் துறை அமைச்சரின் விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கம்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949 பிரிவு (3)*(i)(a)*–ன்படி மாவட்டக் குழுவின் முன்னனுமதியின்றி தமக்கு விற்கப்பட்ட வன நிலத்திற்கான உரிமையைப் பெற வேண்டி, வாங்கியவர்களிடமிருந்து தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம் 4*(A)*–ஐ நடைமுறைப்படுத்த*